நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

# முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 178 ஆங்கீரச வைகாசி 10 (23.05.1992) சனி

## வற்றாப்பளை படுகொலை; விசாரணைக்குழு நியமனம்

வற்றாப்பளை அம்மன் கோயிலில் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் பொதுமக்கள் பலியான சம்பவம் குறித்து விசாரணை நடத்த நீதிபதி ஜெயவதி தலைமையிலான மூவர் கொண்ட விசாரணைக் குழுவை அரசு நியமித்துள்ளது. இந்த விசாரணைக் குழுவை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறிம் ரணதுங்க நியமித்துள்ளதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. கடந்த திங்கள் வற்றாப்பளை அம்மன் கோயில் திருவிழாவின் போது முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் 10 பொது மக்கள் பலியானதும் இருபதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததும் தெரிந்ததே.

# பிரதமரின் பாராளுமன்ற உரைக்கு
# இந்தியத் தூதரகம் கடும் ஆட்சேபம்

### தூதுவர் ஜாவின் பேட்டியை விஜேதுங்க தவறாக அர்த்தம் கொண்டதாக தெரிவிப்பு

புலிகள் மீதான இந்தியாவின் தடைகுறித்து ஸ்ரீலங்காப் பிரதமர் டி. பி. விஜேதுங்க நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றியமைக்கு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் கடும் ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய பிரதமர் விஜேதுங்க, இந்தியத் தூதுவர் ஜா சண்டே டைம்ஸுக்கு அளித்த பேட்டி ஒன்றை சுட்டிக்காட்டி புலிகள் மீது இந்தியா தடைவிதித்திருப்பது ஓர் அடையாள நடவடிக்கையே என்றார். இந்தியாவைப் போன்று புலிகளை ஸ்ரீலங்காவும் தடை செய்ய முடிவு எடுக்காதது ஏன் என்றும் பிரதமர் அப்போது குறிப்பிட்டமை தெரிந்ததே.

இது குறித்து நேற்று அறிக்கை வெளியிட்ட கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் 'திரு ஜா அளித்த பேட்டியை பிரதமர் விஜேதுங்க தவறாக

— 4 ஆம் பக்கம் பார்க்க

# சிவராசன் இந்தியாவில் பயிற்சி பெற்றார் என்று
# குற்றப்பத்திரிகையில் இல்லை என இந்தியா மறுப்பு

ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக விசேட புலனாய்வுக் குழு நீதிமன்றில் தாக்கல் செய்த குற்றப்பத்திரிகையில் இறந்துவிட்ட சந்தேக நபரான சிவராசன் இந்தியாவில் பயிற்சிபெற்றார் எனக் குறிப்பிட்டிருந்ததாக இந்தியப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் செய்தியை நேற்று இந்திய அரசு மறுத்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த அரச தரப்புப் பேச்சாளர் ஒருவர், "சிவராசனுக்கு இந்தியா பயிற்சி அளித்ததாக எந்தக் குறிப்பும் குற்றப்பத்திரிகையில் இல்லை" என்றார்.

அத்துடன் இக்குற்றப்பத்திரிகையில் திருமதி சோனியா காந்தி சாட்சியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளையும் இந்திய அரசு மறுத்துள்ளது.

★ வடபகுதி விஜயம் குறித்து கே. பி. சுனில்

# புதிய குற்றவியல் சட்டங்களை
# அறிஞர்கள் வடக்கில் தயாரிக்கின்றனர்

"யாழ் பல்கலைக்கழக சட்ட வல்லுநர்களும் முதுநிலை சட்ட அறிஞர்களும் இணைந்து புதிய குற்றவியல் சட்டங்களைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில்

இவ்வாறு அண்மையில் வடபகுதி வந்து திரும்பிய மூன்று நாள் இலக்ரோட்டப் வீக்லி செய்தியாளரும் தற்போதைய இந்திய சண்டே ஒப்சேவர் செய்தியாளருமான கே. பி.

திய சண்டே ஒப்சேவரில் அவர் கட்டுரையொன்றை எழுதியுள்ளார்.

தாம் வடக்கில் விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட காவல்துறையின் அதி

லுள்ள நகரக் கிராமப்பகுதிகளில் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு அதற்கென பணியாற்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள், பிரபல சட்டத்தரணிகள் தெரிவு செய்ய பட்டுள்

## மின்மாற்றிகள் மீண்டும் சேதம்

மட்டக்களப்பு பகுதியில் அண்மையில் இனந்தெரியாதவர்களினால் சேதமாக்கப்பட்டு 1.5 மில்லியன் ரூபா செலவில் திருத்தியமைக்கப்பட்ட மின்மாற்றிகள் மீண்டும் சேதமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## புளியங்குளம் சந்தைப்பகுதியில் விமானங்கள் குண்டுவீச்சு

புளியங்குளம் பகுதியில் நேற்றுக்காலை இரு குண்டுவீச்சு விமானங்கள் தாக்குதல் நடத்தியுள்ளன.

நேற்றுக்காலை 10 மணியளவில் இரு குண்டுவீச்சு விமானங்களும் ஹெலிகப்டர் ஒன்றும் புளியங்குளம் சந்தைப் பகுதியில் நான்கு குண்டுகளை தொடர்ந்து வீசின. இதில் இரு கடைகள் மற்றும் இரண்டு வாகனங்களும் சேதமடைந்தன.

தெய்வாதீனமாக உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை. இதேவேளை நேற்று திருகோணமலையில் கும்புறுப்பிட்டி காட்டுப் பகுதியிலும் இரு பொமர்களும் ஹெலிகப்டர் ஒன்றும் தாக்குதல் நடத்தியதாக தெரிவிக்கப்படுகிறது.

## மண்கூடதீவிலிருந்து ஷெல் தாக்குதல்

மண்டைதீவு இராணுவத்தினர் நேற்று மாலை தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல்களையும், கலிபர் தாக்குதல்களையும் நடத்தினர்.

நாவாந்துறை, கொட்டடி பகுதிகளில் ஷெல்கள் விழுந்து வெடித்தன. 06

## சுற்றிவளைப்பினால் வாகரையில் பொருள் தட்டுப்பாடு

மட்டக்களப்பு வாகரைப் பகுதியை படையினர் சுற்றிவளைத்திருப்பதால் அப்பகுதி தமிழ் மக்கள் உணவுப் பொருள்களை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி கூட்டுறவுச்சங்கம் ஒன்றிற்கு வந்த உணவுப் பொருள்களையும் படையினர்

இதேவேளை வாகரை உதவி அரசாங்க அதிபர் மற்றும் இதர அதிகாரிகளும் இப்பகுதிக்கு செல்ல படையினர் அனுமதிவழங்கவில்லை.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவுக்கடை ஒன்றில்

## அறிஞர்கள் வடக்கில் தயாரிக்கின்றனர்

“யாழ் பல்கலைக்கழக சட்ட வல்லுநர்களும் மூத்த நிலை சட்ட அறிஞர்களும் இணைந்து புதிய குற்றவியல் சட்டங்களைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உருவாக்கி வருகின்றனர் இது சட்டத்துறையில் உலகிற்புரட்சிகர முன் உதாரணமாகும்”

இவ்வாறு அண்மையில் வடபகுதி வந்து திரும்பிய முன்னாள் இலங்கை ரேட்டட் வீக்லி செய்தியாளரும் தற்போதைய இந்திய சண்டே ஒப்சேவர் செய்தியாளருமான கே. பி. சுனில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தனது வடபகுதி விஜயம் குறித்து இந்திய சண்டே ஒப்சேவரில் அவர் கட்டுரையொன்றை எழுதியுள்ளார்.

தாம் வடக்கில் விடுதலைப் புலிகளினால் உருவாக்கப்பட்ட காவல்துறையின் அதிகாரி நடேசனைச் சந்தித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள நகரக் கிராமப்பகுதிகளில் நீதிமன்றங்கள் உருவாக்கப்பட்டு அதற்கென பணியாற்ற ஓய்வுபெற்ற நீதிபதிகள், பிரபல சட்டத்தரணிகள் தெரிவு செய்யப்படுகின்றனர் எனவும் கே. பி. சுனில் குறிப்பிட்டுள்ளார்.

— 04 ஆம் பக்கம் பார்க்க

மட்டக்களப்பு வாகரைப் பகுதியை படையினர் சுற்றி வளைத்திருப்பதால் அப்பகுதி தமிழ் மக்கள் உணவுப் பொருள்களை பெறமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இப்பகுதி கூட்டுறவுச்சங்கம் ஒன்றிற்கு வந்த உணவுப் பொருள்களையும் படையினர் திருப்பி அனுப்பி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை வாகரை உதவி அரசாங்க அதிபர் மற்றும் சில அதிகாரிகளும் இப்பகுதிக்கு செல்ல படையினர் அனுமதிவழங்கவில்லை.

உதவி அரசாங்க அதிபர் அலுவலகம் படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவுக்கடை ஒன்றில் படையினர் தங்கியிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவை

# சுதந்திரக்கட்சி பகிஷ்கரிக்கும் - அனுரா அறிவிப்பு

எதிர்க்கட்சிகளை அரசாங்கம் மதித்து நடவாத காரணத்தினால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி பகிஷ்கரிக்கும் என அக்கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான அனுரா பண்டாரநாயக்க வியாழக்கிழமை கொழும்பில் தெரிவித்தார் என இந்திய வானொலி நேற்று அறிவித்தது.

இப்பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த மங்கள முனசிங்க என்பது குறிப்பிடத்தக்கது.

(முன்வந்த செய்தி உள்ளே)

## கிணற்றில் கிடந்த சடலம்

## அடையாளம் காணப்பட்டது

சண்டிலிப்பாய் கல்வளை ஒழுங்கையாலுக்கு அருகில் உள்ள வயல் கிணறு ஒன்றிலிருந்து சங்கானை காவல் துறையினரால் மீட்கப்பட்ட அழுகிய ஆணின் சடலம் இரண்டு பிள்ளைகளின் தந்தையான வடலியடைப்பு காயா வீதியைச் சேர்ந்த சிவசுந்தரம் இலங்கேசராசா (28) என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இவர் சுமார் 6 மாதங்கள் வரை வெளிநாட்டுக் கப்பல் ஒன்றில் வேலைசெய்து விட்டு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரே இங்கு வந்திருந்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சுகயீனம் காரணமாக யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்

— 4 ஆம் பக்கம் பார்க்க

★ பாராளுமன்றத்தில் அறிவிப்பு

# தெரிவுக்குழுவிலிருந்து சுதந்திரக்கட்சி வெளியேறும்

இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இனி மேல் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

கட்சியின் செயற்குழு இத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் கொழும்பு மாவட்ட சுதந்திரக்கட்சி எம் பி நிமால் ஸ்ரீபால டி சில்வா தெரிவித்தார்,

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் மங்கள முனசிங்க பதவி வகிப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனால் சுதந்திரக்கட்சியின் வெளியேற்றம் தெரிவுக் குழுவின் நடவடிக்கைகளை குறிப்பிடத்தக்களவுக்கு பாதிப்படையச் செய்யுமென கொழும்பில் அரசியல் அவதானிகள் தெரிவித்தனர்.

## இன்று...

யா/மூத்ததம்பி மகாவித்தியாலய அபிவிருத்தி நிதிக்காக முல்லை - யாழ் ஆசிரியர்கள். நடன. சங்கீத ஆசிரியைகள். கல்லூரி அதிபர்கள் நிர்வாக அதிகாரிகள் வழங்கும் "இலைமறைகாயாக நின்ற சோழர்" பாரம்பரிய ஆட்டநாடகம் மூத்ததம்பி வித்தியாலய மைதானத்தில் திறந்த வெளியரங்கில் இன்று மாலை 6 மணிக்கு நடைபெறவுள்ளது.

கலை. பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரையும் சிறப்பு விருந்தினர்களில் ஒருவராகக் கலந்துகொள்கிறார்.

## யாழ். மாணவரிடையே சிற்ப, ஓவியப் போட்டிகள்

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளில் உள்ள மாணவர்களிடையே சோமிட மாட்டங்களில் ஓவிய, சிற்பத் தயாரிப்புக்களை உருவாக்கி, தேர்ந்தெடுக்கப்படும் படைப்புக்களை யூலை 9, 10.11 ஆம் திகதிகளில் மாவட்டமட்டத்தில் காட்சிக்கு வைப்பதற்கு யாழ்- பிரதேச கல்விப் பணிமனை நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இந்த ஓவிய, சிற்பத்தயாரிப்புக்கள் பாடசாலை மாணவர்களிடையே கனிஷ்ட நிலையிலும், சிரேஷ்ட இடைநிலையிலும், கல்லூரி நிலையிலும் மூன்று பிரிவுகளாக நடைபெற உள்ளது. (15)

## யாழ்ப்பாணத்தில் விபுலானந்தர் நூற்றாண்டுவிழா கண்காட்சி

யாழ். மாநகரசபை நடத்தும் விபுலானந்த அடிகள் நூற்றாண்டு விழாவும், நூல் கண்காட்சியும் இம் மாதம் 24 ஆம் 25 ஆம் 26 ஆம் திகதிகளில் நல்லூர் பொதுசன நூலக நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை முற்பகல் நூல் கண்காட்சியைத் திறந்து வைத்து சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தொடக்கவுரை நிகழ்த்துவார்.

மாலை நிகழ்ச்சியில் கலை, பண்பாட்டுக்கழக உதவிப் பொறுப்பாளர் திரு.வளநாடன் தொடக்கவுரை நிகழ்த்துவார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் கா.சிவத்தம்பி சிறப்புரையாற்றுவார்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் பேராசிரியர் அ.சண்முகதாஸ் சிறப்புரை நிகழ்த்துவார்.

## கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்குத் தடுப்பூசி!

கால்நடைகளில் ஏற்படும் நோய்களைத் தடுக்கும் முயற்சியாகக் கால்நடைகளுக்குத் தடுப்பூசி போடும் வேலைகள் கிளிநொச்சி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

754 மாடுகளுக்கு எவ் எம். டி. (F. M D ) கால்வாய் நோய்த் தடுப்பு மருந்தும், 302 மாடுகளுக்கு எச் எஸ். (H S) தொண்டை அடைப்பான் தடுப்பு மருந்தும் அங்கு ஏற்றப்பட்டுள்ளன.

2, 657 கோழிகளுக்கு ரனிக்கட் நோய்த் தடுப்பு மருந்தும் ஏற்றப்பட்டுள்ளதாகவும், இதனால் கால்நடைகளிடையே நோய் பரவுவதை ஓரளவே கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முடிந்துள்ளது எனவும், போதியளவு கால்நடை மருந்துகள் கொண்டுவரப்படாமையினால் வழமையான நோய்த் தடுப்பு வேலைகள் பாதிப்படைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## புகையிரதப் பகுதிக்கு 39 கோடி ரூபா நஷ்டம்!

இலங்கை புகையிரதத் திணைக்களத்திற்கு கடந்த வருடம் 39 கோடி 13 இலட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

கடந்த வருடம் 80 கோடி 84 இலட்சம் ரூபாவை மட்டுமே புகையிரதப் பகுதியால் வருமானமாகப் பெற முடிந்துள்ளது.

வடபகுதிக்கான புகையிரத சேவைகள் பாதிப்படைந்துள்ளமையே புகையிரதப் பகுதியின் வருமானக் குறைவுக்கு பிரதான காரணமெனவும் புகையிரதப் பகுதி தெரிவித்துள்ளது.

## ராஜீவ் கொலை வழக்கில் 179 இரகசிய சாட்சிகள்

ராஜீவ் கொலை வழக்கு விசாரணையின் போது 1044 சாட்சியங்கள் சாட்சியமளிப்பர் என அறிவிக்கப்படுகின்றது.

இவர்களில் 179 பேர் இரகசிய சாட்சிகளாகும். இந்த இரகசிய சாட்சிகள் பற்றிய விபரங்களை வெளியிடக்கூடாது என விசேட நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இந்த உத்தரவை மீறும் பத்திரிகையாளர்களுக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும் 1000 ரூபா அபராதமும் விதிக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 179 பேரினதும் பெயர் விபரங்கள் நீதிமன்ற உத்தரவிலும் இடம்பெறவில்லை என பணிக்கப்பட்டுள்ளது.

★ சபையில் புதனன்று சம்பவம்

## சபாநாயகரை நோக்கி புத்தகவீச்சு; கேலிக்குரல்!

சபை நடவடிக்கைகள் முடிவடைந்து சபாநாயகர் எம். எச். மொகமட் சபையை விட்டு வெளியேறிக்கொண்டிருந்தபோது எதிரணி எம். பிக்கள் சிலர் அவர் மீது புத்தகங்களைத் தூக்கிஎறிந்து. கூச்சலிட்டு அவமதித்தனராம்,

கடந்த புதன்கிழமை மாலை இச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இது தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் அறுவர் பாராளுமன்ற உரிமைகள் கமிட்டியின் விசாரணைக்கு உள்ளாக்கப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

"ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் முற்றிலும் ஒழுங்கீனமாக நடந்து சபையை அவமதித்துள்ளனர்" எனப்பதில் சபை முதல்வர் அமைச்சர் விஜேபால மெண்டிஸ் நேற்று முன்தினம் சபை மீண்டும் கூடியபோது இச் சம்பவம் குறித்துப் பிரஸ்தாபிக்கையில் தெரிவித்தார்.

## வாழைநார் தொழிற் பயிற்சி

கோப்புரம மத்திய கிராம அபிவிருத்திச் சங்கத்தின் கீழியங்கும் வாழைநார்ப் பட்டுக் கைத்தொழில் பயிற்சி நிலையத்திலுள்ள ஆசிரிய பயிற்சிப் பாடசாலையில் புதிய பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

கைத்தொழில் ஆசிரிய பயிற்சிபெற விரும்புவோர் நிலைய இயக்குநருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது, (14)

## கல்விப் பகுதி சிற்றூழியர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை

31 5.89 இற்கு முன்னர் நியமிக்கப்பட்டு அமைய அடிப்படையில் பாடசாலைகளிலும், கல்வி அலுவலகங்களிலும் கடமையாற்றும் சிற்றூழியர் சேவையைச் சேர்ந்தவர்களுக்கு உடனடியாக நிரந்தர நியமனம் வழங்கும் நடவடிக்கையில் வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சு ஈடுபட்டுள்ளது

இவர்களுக்கான நிரந்தர நியமனக் கடிதங்கள் தயாரிக்கப்படுவதாகவும் வெகு விரைவில் அவை சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (15

## முல்லையில் 8 பாடசாலைகளில் முறைசாராக் கல்விப் போதனை

முல்லைத்தீவில் 8 பாடசாலைகளில் 12 முறைசாராக் கல்வி வகுப்புகளை யூன் மாதம் 1 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு முறைசாராக் கல்விப்பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது.

வித்தியானந்தாக் கல்லூரியில் ஆடை வடிவமைத்தல், றேடியோ தொழில்நுட்பம், உணவு பதனிடல் ஆகிய நெறிகளும், மகா வித்தியாலயத்தில் தையல் வேலை, புத்தகம் கட்டுதல் ஆகிய நெறிகளும், முள்ளியவளை அ. த. க. பாடசாலையில் ஆடை வடிவமைத்தல் நெறியும், விசுவமடு மகா வித்தியாலயத்தில் ஆடைவடிவமைத்தல் நெறியும், உடையார்கட்டு அ. த. க. பாடசாலையில் விவசாயமும் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள[illegible]

## 'தமிழகத்தில் நிர்வாகச் சீர்கேடு'

- பீ. ஜே. பி.

தமிழக அரசு மாநில நிர்வாகத்தை சீராகத் தவறி விட்டதாக பாரதிய ஜனதாக் கட்சியின் துணைத் தலைவர் ஜனா கிருஷ்ணமூர்த்தி கோயம்புத்தூரில் தெரிவித்துள்ளார்

தமிழகத்தில் அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் சீரான நிர்வாகம் இல்லை எனக் குறிப்பிட்ட அவர் சட்டப் பேரவையில் வலுவான எதிர்க்கட்சி இல்லாததால் [illegible]

## போட்டிகள்

வீரவேங்கை விக்ரர் ஞாபகார்த்தமாக 'டிக்கர்' விளையாட்டுக் கழகம் நடாத்தும் 7 வீரர்கள் கொண்ட பந்த[illegible]

## இலங்கை மத்திய வங்கி

## அறிவித்தல்

### ஹோம் பினான்ஸ் லிமிட்டட்

(இலங்கை மத்திய வங்கியின் நாணய சபையின் அதிகாரத்துக்குட்பட்டது)

இலங்கை மத்திய வங்கியானது 1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக ஹோம் பினான்ஸ் லிமிட்டட் இன் வைப்பாளர் தொடர்பான நிவாரணக் கொடுப்பனவு வேலைகளை முடிவுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளது சில வைப்பாளர்கள் தம்மால் அனுப்பப்பட்ட நிவாரணக் கொடுப்பனவு விண்ணப்பங்கள் தொடர்பாக கம்பனிக்கு அவர்களால் [illegible]

இலங்கை மத்திய வங்கியானது 1992 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆம் திகதிக்கு முன்பாக ஹோம் பினான்ஸ் லிமிட்டட் இன் வைப்பாளர் தொடர்பான நிவாரணக் கொடுப்பனவு வேலைகளை முடிவுக்குக் கொண்டுவர உத்தேசித்துள்ளது. சில வைப்பாளர்கள் தம்மால் அனுப்பப்பட்ட நிவாரணக் கொடுப்பனவு விண்ணப்பங்கள் தொடர்பாக கம்பனிக்கு அவர்களால் கொடுக்கப்பட்ட விலாசங்களின் படி அனுப்பப்பட்ட கடிதங்களுக்குப் பதில் நடவடிக்கை எடுக்கவில்லை என்பதை அவதானித்துள்ளோம். இதுவரை முதலாவது பகுதிக் கொடுப்பனவு பெறாத எல்லா வைப்பாளர்களும் உடனடியாகக் கம்பனியுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். கம்பனியின் விலாசம் கீழ் வருமாறு:

**Home Finance Ltd.,**
**463, Galle Road,**
**Colombo - 3.**

இயக்குனர்,
வங்கி அல்லாத நிதி நிறுவனங்களின் மேற்பார்வை

05038

துள்ளது.

வித்தியானந்தாக் கல்லூரியில் ஆடையமைத்தல், றேடியோ தொழில் நுட்பம், உணவு பதனிடல் ஆகிய நெறிகளும், மல்லாவி மகா வித்தியாலயத்தில் ஆடையமைத்தல், பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் விவசாயத் தொழில் நுட்பம், ஆடையமைத்தல் நெறிகளும், திருமுருகண்டி அ.த.க. பாடசாலையில் புத்தகம் கட்டுதல் நெறியும், புதுக்குடியிருப்பில் இயங்கும் முல்லைத் மது மகா வித்தியாலயத்தில் ஆடையமைத்தல் நெறியும், உடையார்கட்டு அ.த.க. பாடசாலையில் விவசாயமும் ஆரம்பிக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

பயிற்சி பெறுவதற்கும், பயிற்சியளிக்கும் போதனாசிரியர் பதவிக்கும் விண்ணப்பங்கள் அந்தந்த பாடசாலை அதிபர்களிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என முல்லைத்தீவு கல்வித்திணைக்களம் அறிவித்துள்ளது (52)

## கனகநாயகத்திற்கு முத்திரை

தேசிய வீரர்கள் தினத்தை முன்னிட்டு ஒரு ரூபா பெறுமதியான நான்கு முத்திரைகளை இலங்கை அரசு நேற்று வெளியிட்டது.

இவற்றில் கேற் முதலியார் நா. கனகநாயகத்தின் நினைவு முத்திரையும் ஒன்றாகும்.

## போட்டிகள்

விரவேங்கை விக்ரர் ஞாபகார்த்தமாக 'ஒலிவர்' கலை பாட்டுக் கழகம் நடாத்தும் 7 வீரர்கள் கொண்ட பந்து உதைபந்தாட்டப் போட்டியில் நேற்று முன்தினம் கோண்டாவில் 'குமார்' விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற போட்டியின் முதல் ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக பி பிரிவு அணி வைக்கிங் விளையாட்டுக் கழக அணியைத் தோற்கடித்தது.

இரண்டாவது ஆட்டத்தில் குருநகர் பாடுமீன் விளையாட்டுக்கழக அணி அதனை எதிர்த்து ஆடிய நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழக அணியை 7 : 1 என்ற கோல்கள் கணக்கில் தோற்கடித்தது 16

துள்ளார்.

தமிழகத்தில் அரசியல் ரீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் சீரான நிர்வாகம் இல்லை எனக் குறிப்பிட்ட அவர் சட்டப் பேரவையில் வலுவான எதிர்க்கட்சி இல்லாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக கருத்துத் தெரிவித்தார்.

## படையினர் பாதுகாப்பராம்

முஸ்லிம் சமூகத்தினருக்குப் பாதுகாப்பளிப்பதற்காக இலங்கை பாதுகாப்புப் படையினர் பூரணமாகப் பயன்படுத்தப்படுவர் என ஜனாதிபதியின் செயலாளர் கே. ஏ. விஜயதாச உலக முஸ்லிம் லீக்கிற்கு அறிவித்துள்ளார்.

## சபையில் கேட்டவை

புலிகளை முறியடிக்கவேண்டும் என இன்று கூறும் அரசாங்கம் சில வருடங்களுக்கு முன்பு புலிகளுக்குச் சார்பாகப் பேசியதை எவரும் மறந்துவிடமுடியாது.

ரிச்சர்ட் பத்திரன ஸ்ரீ. ல. சு. க

★

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு இந்த அரசாங்கம் எந்த விதமான முயற்சியையும் எடுக்கவில்லை.

அதாவுட செனிவிரத்ன ஐ. சோ. மு

★

1956 இல் கொண்டுவரப்பட்ட அரச கரும மொழிச் சட்டத்தினால்தான் வடக்குக் கிழக்கில் இன்று தீவிரவாதம் தோன்றியுள்ளது. 1961 இல் வடக்குக் கிழக்கில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தை அடக்க எடுத்த நடவடிக்கை, செல்வநாயகம் - சிறுபான்மையினத் தலைவரின் சுதந்திரம் நீக்கப்பட்டமை போன்றவையும் தீவிரவாதம் தோன்றக் காரணமாகின.

ஹட்சன் சமரசிங்க ஐ. தே. க

★

அரசாங்கம் வடக்கு கிழக்கில் நடத்துவது யுத்தமல்ல யுத்தம்போல ஒரு கண்துடைப்பே விடுதலைப்புலிகளுக்கு ஆயுத உதவி, தங்குமிடவசதி போன்றவற்றைச் செய்ததும் இந்த அரசே.

தினேஷ் குணவர்த்தன ம. ஐ. மு

★

இனப்பிரச்சினைத் தீர்வுக்கு இராணுவத் தீர்வை நாம் நம்பியிருக்கவில்லை, நாட்டில் சமாதானம், அரசியல் உறுதிப்பாட்டை நிலைநாட்டக்கூடிய வழிவகைகளைச் செயல்முறைப்படுத்தச் சர்வ கட்சிகளும் சேர்ந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவொன்றை அமைப்பதற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. லக்ஷ்மன் மங்கள முனசிங்காவால் பிரேரிக்கப்பட்ட பிரேரணையை நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம்.

பிரதமர் டி. பி. விஜயதுங்க

## கால்நடை அபிவிருத்திக்கு மாகாணசபை நடவடிக்கை

கடற்பகுதியில் கால்நடை அபிவிருத்தியை ஊக்குவிக்க வடகிழக்கு மாகாண சபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

ஆனால் இங்குள்ள சில கால்நடை அபிவிருத்திப் பகுதி அதிகாரிகள் இதற்கு ஒத்துழைப்புத் தருவதில்லை என்று திருகோணமலையில் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அடுத்த முறை கால்நடைத்துறைக்கு வரும் குமண கப்பலில் கால்நடைகளுக்கான உணவு வகைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. 47

## புதிய நிர்வாகத்தின் கீழ் திக்கம் சாராய வடிசாலை

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பனை அபிவிருத்திச் சபையின் பொறுப்பின் கீழ் இருந்த வடக்கின் பாரிய தொழிற்சாலையான திக்கம் சாராய வடிசாலை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவு சமாசத்துக்கு கைமாறவிருக்கிறது.

அரசாங்கத்தின் அனுமதியுடன் பனை அபிவிருத்திச் சபை இவ் வடிசாலையை மேற்படி சமாசத்துக்கு கையளிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருவதாகத் தெரிய வருகிறது. 06


## காலமானார்

### தில்லையம்பலம் சபாரட்ணம்

### (லோயர்)

பிரபல நாற்று வியாபாரியும், கமக்காரரும் ஆகிய தில்லையம்பலம் சபாரட்ணம் அவர்கள் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார், அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 ஆம் திகதி இன்று சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் பி. ப. 3 மணியளவில் நடைபெறும். இதனை உற்றார், உறவினர்கள் நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

G. P. S றோட்,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

மகன்
கோபாலன்

05041


இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 23-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

★ விபத்துக்களைத் தடுக்க

## வீதிஒழுங்கு முறைகளை பேண காவல்துறை வேண்டுகோள்

கடந்த சில நாட்களாக குடாநாட்டின் பல பகுதிகளில் இடம்பெற்ற வாகன விபத்துக்களில் அதிகமான உயிரிழப்புக்களும் பொருள் இழப்புக்களும் ஏற்பட்டுள்ளதால் பொதுமக்கள் வீதி ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடந்து கொள்ளுமாறு தமிழீழ காவல்துறையினர் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர்.

பக்கம் பக்கமாக சைக்கிள்களில் சென்று, சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்களில் செல்லும் போது வீதியில் வரும் வாகனத்தைக் கவனிப்பதில்லை எனவும் இதனால் விபத்து ஏற்படுவதாகவும் காவல்துறையினர் சுட்டிக்காட்டுகின்றனர்

இதேபோல பிறேக், வெளிச்சம் இன்றி இரவு பகல் வாகனங்கள் செலுத்தப்படுதல்; சைக்கிள்களின் அளவுக்கதிகமான சுமைகளை ஏற்றுதல்; மினிபஸ்களில் மிதிபலகையில் நின்று பயணம் செய்தல்; அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றுதல்

இவ்வாறான காரணங்களினால் வீதி விபத்துக்கள் ஏற்படுவதாகவும் காவல்துறையினர் பொதுமக்களுக்கு அறிவிக்கின்றனர்

## தீவிரவாத மாநிலங்களில் தமிழ்நாடும் சேர்ப்பு

இந்தியாவில் தீவிரவாதம் பரவியுள்ள மாநிலங்களின் வரிசையில் தமிழ் நாட்டையும் பாரதிய ஜனதா கட்சி சேர்த்துள்ளது.

பஞ்சாப், காஷ்மீர், அஸாம் மாநிலங்களைத் தொடர்ந்து தீவிரவாதம் பரவியுள்ள மாநிலமாக தமிழ் நாடும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று டில்லியில் செய்தியாளர்களிடையே பேசிய பாரதிய ஜனதா கட்சித் தலைவர்கள் இம் மாநிலங்களில் தோன்றியுள்ள தீவிரவாதம் பிரச்சினைகள் குறித்து மத்திய அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும் எனக் கோரினது.

## பண்டத்தரிப்புக்கு இலவச புத்தகங்கள்

பண்டத்தரிப்பு கோட்டப் பிரிவுப் பாடசாலைகளுக்கான இரண்டாம் கட்ட இலவச பாடப்புத்தகங்கள் கல்வி அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இதுவரை புத்தகங்களைப் பெற்றுக்கொள்ளாத மாணவர்களது விபரங்களைக் கோட்டக்கல்வி அதிகாரிக்குச் சமர்ப்பித்து புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளலாமெனத் தெரிவிக்கப்படுகிறது. 18

பிரதமரின்...

அர்த்தம் கொண்டுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளது.

விஜேதுங்கவின் பாராளுமன்ற உரை இந்தியாவின் கொள்கைக்கே வேறு அர்த்தம் கற்பிப்பதாக உள்ளது எனக் குறிப்பிட்ட இந்தியத் தூதரகம் இது போன்ற தவறான கொள்கைகளில் ஸ்ரீலங்கா நடக்கக்கூடாது எனவும் எச்சரிக்கை தொனியில் தெரிவித்துள்ளது.

கிணற்றில்...

பட்டு சிகிச்சை பெற்றுவந்தாரென்றும் ஆஸ்பத்திரியை விட்டு வெளியேறி கிணற்றில் விழுந்து தற்கொலை செய்திருக்கலாமென்றும் நம்பத் தகுந்த வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது. 18

புதிய...

விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணியினரால் நடத்தப்படும் செஞ்சோலை அநாதைகள் விடுதி குறித்து அவர், இங்கு அநாதை பெண்பிள்ளைகள் பராமரிக்கப்படுகின்றனர் இவர்களுக்கான உணவுகள் போதியளவு வழங்கப்படுகிறது, தகுதியான ஆசிரியர்களை அக் குழந்தைகளுக்கு கல்வி புகட்டுகின்றனர் எனவும் எழுதியுள்ளார்.

இச் செய்தியாளர் கே. பி. சனியை அண்மையில் கைது செய்த தமிழக சட்டசபை ஏவை சபாநாயகர் சேடப்பட்டி முத்தையா உத்தரவு பிறப்பித்ததும் இதற்கு உயர் நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்ததும் நினைவிருக்கலாம்.

## சிறிய செய்திகள்

### வலைப்பந்தாட்டப் போட்டி

யாழ் மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரை இறுதிப் போட்டிகள் இன்று யாழ் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

பிற்பகல் 4.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இரண்டாவது போட்டியில் யாழ் பல்கலைக்கழக அணியை எதிர்த்து நவாலி முரசொலி அணியும் பிற்பகல் 5 மணிக்கு இடம்பெறவுள்ள மூன்றாவது போட்டியில் தெல்லிப்பழை இராஜ் சொப்பர்ஸ் அணியை எதிர்த்து பாஷையூர் சென் அன்ரனீஸ் அணி ஆடவுள்ளது.

### இன்று தபால்கள் அனுப்பப்படும்

யாழ் குடாநாட்டுத் தபால் பொதிகள் மருத்துவத்துறையில் இருந்து கொழும்பு செல்லும் கப்பலில் அனுப்பிவைப்பதற்காக இன்று காலை 8 மணிக்கு யாழ் பிரதம தபாலகத்தில் இருந்து மருத்துவத்துறைக்கு எடுத்துச்செல்லப்படவுள்ளதாக தபால் வட்டாரங்கள் தெரிவித்தன. (06)

### கண்டெடுக்கப்பட்ட சாக்குப் பொதி

நேற்று இரவு திருநெல்வேலி ஆடியபாதம் வீதி வேணியடி வைரவர் கோவிலடியில் பெரிய சாக்குப் பொதி ஒன்று வைரவர் கோவில் அடியார்களால் கண்டெடுக்கப்பட்டு முரசொலி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது

இப்பொதியின் உரிமையாளர் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளும்வண்ணம் கேட்கப்படுகின்றனர். (06)

### நூலகங்கள் மூடப்படும்

யாழ். மாநகரசபை நடாத்தும் விபுலானந்தர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, எதிர்வரும் 24. 05. 92, 26. 05. 92, ஆகிய இரு நாட்களும் யாழ். பொதுசன நூலகத்தின் அனைத்துக் கிளைகளும் மூடப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சகல வாசகர்களும் நல்லூர் நூலகத்தில் முற்பகல் 09 00 மணிக்கு நடைபெறும் நூற்கண்காட்சியிலும், பிற்பகல் 04. மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறும் நினைவுச் சொற்பொழிவிலும் கலந்துகொண்டு பயனடையுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

### 65 பேருக்கு பட்டமளிப்பு

தேசிய வீரர்கள் தினத்தை முன்னிட்டு நேற்று 65 பிரமுகர்கள் ஜனாதிபதியினால் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டனர்,

இவர்களில் மூவர் வெளிநாட்டுப் பிரஜைகள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி மாளிகையில் இப்பட்டமளிப்பு வைபவம் நடைபெற்றது.

### 7 ஆவது தொடர் உணவு முத்திரை

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் 7 ஆவது தொடர் வறுமை நிவாரண முத்திரைகள் கிராமசேவையாளர்களினூடாக வழங்கப்படுகின்றன

சில கிராமசேவையாளர்கள் இதுவரை முத்திரைகள் வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. 47